தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

04.02.2013 A.M

## மேட்டுப்பாளையம் மொத்த மார்க்கெட்டில் உருளைக் கிழங்கு வரத்து குறைவு; விலை உயர்வு

மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு மொத்த மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை (பிப். 3) நடைபெற்ற ஏலத்தில் கிழங்கு வரத்து குறைந்ததால், கடந்த வாரத்தை விட மூட்டைக்கு ரூ. 100-150 வரை விலை அதிகரித்தது.

நீலகிரி மலைப்பகுதிகளில் விளையும் உருளைக்கிழங்கு, காரட், பீட்ரூட், முட்டைகோஸ், முள்ளங்கி, பூண்டு, உள்ளிட்ட விளைபொருட்கள் அனைத்தும் விற்பனைக்காக மேட்டுப்பாளையத்தில் இயங்கும் மொத்த விற்பனை மையங்களுக்கு கொண்டு வரப்படுகின்றன. 100 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மையங்களில் உருளைக்கிழங்கு மற்றும் மலைக் காய்கறிகளின் விற்பனை நடைபெற்று வருகிறது.

துவக்கத்தில் நீலகிரி உருளைக் கிழங்குகள் மட்டுமே இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. நாளடைவில் மார்க்கெட் தேவை அதிகரித்ததை அடுத்து, கோலார், திம்பம், ஹாசனூர், கொள்ளேகால் பகுதி கிழங்குகளும், ஆக்ரா, கொல்கத்தா, இந்தூர், ஃபரூக்காபாத், ஹைதராபாத் பகுதி கிழங்குகளும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

இதனால், சமீப காலமாக அகில இந்திய உருளைக்கிழங்கு விற்பனை கேந்திரமாக மேட்டுப்பாளையம் மாறி வருகிறது. இங்கு உருளைக்கிழங்கு மொத்த விற்பனைக்கென 65 தனியார் மண்டிகளும், அரசுத் தரப்பில் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கமும் உள்ளன.

இங்கு தினமும் கொண்டு வரப்படும் கிழங்குகள் ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டு, தமிழ்நாடு மற்றும் கேரளாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மார்க்கெட் நிலவரம் மற்றும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிழங்கு ஏலம் குறித்து மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தகப் பேரவையின் துணைத் தலைவர் எம். என்.ஜி கோபால் கூறியது:

தற்போது நீலகிரி உருளைக் கிழங்கு சீசன் முடிந்துள்ள நிலையில், மேட்டுப்பாளையம் மார்க்கெட்டின் கிழங்குத் தேவைகளை பூர்த்தி செய்ய கர்நாடகா மற்றும் வட மாநிலப் பகுதிகளிலிருந்து கிழங்குகள் தருவிக்கப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் நீலகிரி கிழங்கு 3 லோடு, கோலார் கிழங்கு 15 லோடு, இந்தூர் கிழங்கு 5 லோடு, ஆக்ரா கிழங்கு 2 லோடு, ஹைதராபாத் கிழங்கு 3 லோடு, கொல்கொத்தா கிழங்கு 3 லோடு ஆகியவை விற்பனைக்கு வந்தன. அதில் 45 கிலோ கொண்ட ஒரு மூட்டை நீலகிரி கிழங்கு ரூ. 1000-1100 வரையும், கோலார் கிழங்கு ரூ. 800-900 வரையும், இந்தூர் கிழங்கு ரூ 750-800 வரையும், ஹைதராபாத் கிழங்கு ரூ. 700-750 வரையும், ஆக்ரா கிழங்கு ரூ. 600-650 வரையும், கொல்கத்தா கிழங்கு ரூ 550-650 வரையும் விற்பனை ஆனது.

கடந்த வாரம் இதே கிழங்குகள் சுமார் 25 லோடு அதிகமாக வந்ததால், மூட்டைக்கு ரூ. 100-150 வரை குறைவாக விற்றது. ஞாயிற்றுக்கிழமை ஏலத்தில் ஏராளமான வியாபாரிகள் பங்கேற்றனர் என்றார்.

## நீர்போக உருளைக் கிழங்கு சாகுபடி: வேளாண் பல்கலை வலியுறுத்தல்

நீர்போக உருளைக் கிழங்கை சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்தி:

2011-ம் ஆண்டு உலக அளவில் 19.24 மில்லியன் ஹெக்டரில் 374.38 டன் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் 2011-12 ஆம் ஆண்டில் 18.87 லட்சம் ஹெக்டரில் பயிரிடப்பட்டு 415.65 லட்சம் டன் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழகத்தில் 2,950 ஹெக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 62,940 டன் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டை விட உருளைக்கிழங்கு உற்பத்தி 35 சதவிகிதம் குறைந்துள்ளது. திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் மட்டுமே உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது.

நீர்போக உருளைக்கிழங்கு பிப்ரவரி மாதத்தில் பயிரிடப்பட்டு ஜூன் மாதத்தில் அறுவடை செய்யப்படும். அறுவடையின் போது உருளைக் கிழங்கிற்குக் கிடைக்கும் விலை குறித்து தெரிந்துகொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 22 ஆண்டுகளாக நிலவிய உருளைக் கிழங்கு விலையை ஆய்வு செய்தது.

இதில் பிப்ரவரியில் பயிரிடப்படும் நீர்போக உருளைக் கிழங்கிற்கு 2013 மே மற்றும் ஜூன் மாதத்தில் கிலோவுக்கு ரூ. 18 முதல் ரூ. 20 வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாதங்களில் பிற மாநிலங்களில் இருந்து வரும் உருளைக்கிழங்கின் வரத்து குறைவாக இருக்கும் என்பதாலும், நீலகிரி உருளைக் கிழங்கின் உயர்வான தரத்திற்காகவும் அதிக விலை கிடைக்கும்.

இவ்விலையைக் கருத்தில் கொண்டு நீர்போக உருளைக்கிழங்கை சாகுபடி செய்யுமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தகவலுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை- 3 என்ற முகவரி அல்லது 0422- 2431405 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் தொழில்நுட்ப விவரங்களை அறிந்துகொள்ள 0423-442170, 94430 52219 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### சொட்டு நீர்ப்பாசன மானியத்தை உயர்த்த வேண்டும்

சொட்டு நீர்ப்பாசன மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென கரும்பு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புகழூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் முத்தூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முத்தூர் கோட்டத்துக்கு உள்பட்ட நத்தக்காடையூர், மேட்டாங்காட்டுவலசு, மூலனூர், ஓலப்பாளையம் பகுதிகளைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

சங்கத் தலைவர் மங்களப்பட்டி எம்.வி.சண்முகராஜ் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் கே.செல்லமுத்து, நிர்வாகிகள் சக்தி வடிவேல், செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடும் வறட்சி, மழையின்மை காரணமாக கீழ் பவானி பாசனப் பகுதியில் காய்ந்து வரும் கரும்புகளை முன்னதாகவே வெட்ட ஆலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2011-12 ஆம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட கரும்பு அல்லாத தொகை ரூ.1.50 லட்சத்தை உடனடியாக திருப்பித் தர வேண்டும்.

கிணறு, ஆழ்குழாய் கிணறு, பைப் லைன் உள்ளிட்ட நீராதாரங்களைப் பெருக்க வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டும். ஏக்கருக்கான சொட்டு நீர்ப்பாசன மானியத்தை ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ.15 ஆயிரமாக உயர்த்த வேண்டும். திருப்பூரை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயக் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வேளாண்மையை ஒரு பாடமாக வைக்க வேண்டும்

உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மையை ஒரு பாடமாக வைத்து மாணவர்களுக்கு கற்றுத் தர வேண்டும் என்று, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

பல்லடம் அருகே கொடுவாயில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் மறைந்த உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் 90 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி (முன்னாள் எம்.எல்.ஏ) தலைமை வகித்தார் .

திருப்பூர் மாவட்ட தென்னை விவசாயிகள் சங்கத் தலைவர் கே.பி.சண்முகசுந்தரம் வரவேற்றார். மாநிலப் பொருளாளர் அவிநாசி ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் என்.கே.டி.பொன்னுசாமி, இந்திய மக்கள் இயக்கத் தலைவர் செ.நல்லசாமி, மருத்துவர் சி.தங்கராஜ், அ.க.சண்முகம் உள்பட பலர் பங்கேற்றனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

உழவு அழிந்தால் உணவுப் பஞ்சத்தை நாடு எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே இளைஞர்களை உழவுத் தொழிலில் ஈடுபாடு கொள்ள செய்ய உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மையை ஒரு பாடமாக வைத்து கற்றுத் தருவதுடன், அனுபவ விவசாயத்தையும் கற்றுத்தர வேளாண் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். அதுவரை கள் விற்கவும் அனுமதிக்க வேண்டும். கருப்புக் கழிவிலிருந்து எத்தனால் தயாரிக்கவும், தென்னை, பனை, கள், மற்றும்

தேங்காயையும் மூலப்பொருளாக கொண்டு ஒயின், பிராந்தி, விஸ்கி உள்ளிட்டவற்றை தயாரித்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

மாட்டுப் பால் லிட்டருக்கு ரூ.30, எருமைப் பால் ரூ.40 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தென் கிழக்கு மற்றும் வட கிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதால் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்: கொமுக

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணமாக தமிழக அரசு வழங்க வேண்டும் என கொமுக பொதுச் செயலாளர் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கோபி நகர, ஒன்றிய ஆலோசனைக் கூட்டமும், பெயர் பலகை திறப்பு விழாவும் சனிக்கிழமை நடைபெற்றன. விழாவிற்கு ஈரோடு மேற்கு மாவட்டச் செயலாளர் சிவராஜ் தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் முத்துசாமி, கோபி நகரத் தலைவர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநிலப் பொருளாளர் பாலு தலைமை நிலையச் செயலாளர் சூரியமூர்த்தி, மாநில இளைஞரணிச் செயலாளர் இளம்பரிதி, கொமுக மாநில பொதுச் செயலாளர் ஈஸ்வரன் ஆகியோர் பேசினார்.

இதைத் தொடர்ந்து, ஈஸ்வரன் நிருபர்களிடம் கூறியது: தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால், விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, விவசாயிகள் வாங்கியுள்ள அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியான காவிரி டெல்டா மாவட்டங்களில் அமைச்சர்கள் குழு நேரில் சென்று பார்வையிட்டது.

அதே போல், வறட்சியால் பாதிக்கப்பட்ட கொங்குநாட்டு பகுதியையும் அமைச்சர்கள் குழு பார்வையிட வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.

தென்னை, பனை விவசாயிகள் வறட்சியால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, நீண்ட நாள் கோரிக்கையான கள் இறக்க அனுமதியளிக்க வேண்டும் என்றார்.

## விதை கிராமத் திட்டப் பயிற்சி

கோபி வட்டார வேளாண்மைத் துறை சார்பில் குள்ளம்பாளையம் கிராமத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி விவசாயிகளுக்கு சனிக்கிழமை நடைபெற்றது .

குள்ளம்பாளையம் ஊராட்சித் தலைவர் ஜெகநாதன் தலைமை வகித்து, பயிற்சியை தொடங்கி வைத்தார். கூகலூர் துணை வேளாண்மை அலுவலர் நாகராஜ் வரவேற்றார். இப் பயிற்சியில் கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கலந்து கொண்டு, விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அதிகாரி ராஜாநன்றி கூறினார். பயிற்சிக்கு வருகை தந்தவர்களுக்கு பயிர் மகசூலை அதிகரிக்கும் உயிர் உரங்கள் வழங்கப்பட்டன.

## சேனைக்கிழங்கு விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

சேனைக்கிழங்கு விளைச்சல் குறைந்ததோடு மட்டுமல்லாமல் விலையும் குறைந்ததால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

கோபி, கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், டி.என்.பாளையம், வாணிப்புத்தூர், சத்தி, அத்தாணி, அந்தியூர், எண்ணமங்கலம், வெள்ளித்திருப்பூர், கொளப்பலூர், சிறுவலூர், பெருந்துறை உள்பட பல்வேறு பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சேனைக்கிழங்கை தனியாகவும், வெங்காயம், மஞ்சள், தென்னை உள்பட பல்வேறு பயிர்களுடன் ஊடுபயிராகவும் விவசாயிகள் கடந்த காலங்களில் பயிரிட்டனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சேனைக்கிழங்கு கிலோ ரூ.24 வரை விற்பனையானது. அப்போது அரபு நாடுகளுக்கும் கோபியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பரவலாக அதிகளவில் விவசாயிகள் சேனைக்கிழங்கு பயிரிட்டதால், ரூ.10 முதல் 15 வரை விற்பனையானது.

ஆனால், தற்போது நிலவும் வறட்சியால் சேனைக்கிழங்கு பயிரிடப்படும் பரப்பளவு கணிசமான அளவு குறைந்துவிட்டது. எனினும், கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணற்று பாசனத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். தற்போது சேனை அறுவடை தீவிரமடைந்துள்ளது.

இதனால், கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளில் விளைந்துள்ள சேனைக்கிழங்கை கோபி அருகே உள்ள வேட்டைக்காரன் கோவில் பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகள் விவசாயிகளின் தோட்டத்துக்கு நேரடியாகச் சென்று வாங்கி குவித்துள்ளனர். விவசாயிகளின் தோட்டத்தில்

கிலோ சேனைக்கிழங்கு ரூ.6-க்கு வாங்கப்படுகிறது. பிறகு வேட்டைக்காரன் கோவில் பகுதியில் சேர்ப்பதற்கு கிலோவுக்கு ரூ.1.50 வரை செலவாகிறது.

பின்னர், கிலோ ரூ.8-க்கு விற்பனை செய்யப்பட்டு லாரியில் எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் சேனைக்கிழங்கு மதுரை, திருநெல்வேலி, மேட்டுப்பாளையம் மற்றும் கேரள மாநிலத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இவை தவிர கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரள மாநிலங்களிலும் சேனைக்கிழங்கு தற்போது அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது.

குஜராத் போன்ற மாநிலங்களுக்கும் சேனைக்கிழங்கு பயிரிட விதைக் கிழங்காக கடந்த சில ஆண்டுகளாக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் தற்போது அங்கிருந்தும் சேனைக்கிழங்கு வாங்க யாரும் வருவதில்லை.

மேலும், சேனைக்கிழங்கின் தோலை சீவி சமைப்பதற்கு பெண்களுக்கு மிகுந்த நேரம் தேவைப்படுவதால் அவர்களும் அதை விரும்புவதில்லை. இதனால் சேனைக்கிழங்குக்கான தேவை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

தற்போது கோபியில் நிலவும் வறட்சியால் சேனைக்கிழங்கு குறைந்த அளவே விளைவிக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்துபவர்கள் குறைந்து வருகின்ற காரணத்தாலும், வெளிமாநிலங்களில் அதிக அளவில் விளைவிக்கப்படுவதாலும் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

பயிர்களை இழந்து வாடும் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும் என தமிழக அரசை தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டச் செயலர் என். ஜாகீர் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேமுதிக நிர்வாகிகள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மறைந்த எம்எல்ஏ முத்துக்குமரன் பெயரில் அரசு மருத்துவ கல்லூரி தொடங்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தீவனப் பற்றாக்குறையைப் போக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சித் தலைவர்களை மிரட்டி வரும் ஊராட்சி உதவி இயக்குநர் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுகை ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகள் நிறைவேற்ற வலியுறுத்தி விரைவில் கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவது, பெருகிவரும் வழிப்பறி சம்பவங்களை தடுக்க காவல்துறை

நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வரும் நகரின் மையத்தில் உள்ள டவுன்ஹாலில் பூங்கா அமைக்கும் திட்டத்தை கைவிட்டு நகரில் உள்ள பிற பூங்காக்களை பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட அவைத் தலைவர் கே.ஆர். சீனிவாசமூர்த்தி, பொருளர் எஸ்.கே. கதிரவன், துணைச் செயலர் ஆர். செந்தில்குமார், கே.ஆர். ஞானம், எஸ். முகமதுஅலிஜின்னா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 34.77 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 34.77 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 405 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்: ராமதாஸ்



அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த 5 மாதங்களில் மட்டும் அரிசி விலை 100 சதவீதம் வரை உயர்ந்திருக்கிறது. பாமாயில் உள்ளிட்ட சமையல் எண்ணெய்களின் விலையும் கடுமையாக உயர்ந்திருக்கிறது.

இது போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவுகூட சாப்பிட முடியாத அவல நிலைக்கு ஏழை மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அரிசி விலை உயர்வுக்கு பதுக்கலும், எண்ணெய் விலை உயர்வுக்கு ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பான சிக்கல்களும்தான் காரணமாகக் கூறப்படுகின்றன.

சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால் அரிசிக்குக் கூடுதல் தட்டுப்பாடு ஏற்பட்டு மேலும் விலை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதைப்போல டீசல் விலை மாதம்தோறும் உயர்த்தப்பட உள்ளதால் காய்கறி உள்ளிட்ட மற்ற பொருள்களின் விலையும் மேலும் அதிகரிக்கும் ஆபத்து உள்ளது.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு விலைவாசியைக் கட்டுப்படுத்த தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வெளிச் சந்தையில் விற்கப்படுவதற்கு இணையான தரம் கொண்ட அரிசியை நியாய விலைக் கடைகள் மூலம் மானிய விலையில் விற்பனை செய்யவும், குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் பாமாயிலின் அளவை இரு மடங்காக உயர்த்தவும் தமிழக அரசு முன்வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தில் ஊழல்: சி.பி.ஐ. விசாரிக்க பாஜக கோரிக்கை



மத்திய அரசு 2008-ஆம் ஆண்டில் அறிவித்த விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி திட்டத்தில் முறைகேடுகள் நடந்திருப்பதாக தலைமை தணிக்கை அதிகாரி தெரிவித்திருப்பது குறித்து, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி தலைவர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய பிரதேச மாநில வேளாண்மை துறை சார்பில் போபாலில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், ராஜ்நாத் சிங் பேசியதாவது:

மத்திய அரசின் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ், ரூ.60 ஆயிரம் கோடி அளவுக்கு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அந்த வகையில், மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று, மத்திய கணக்கு தணிக்கை குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் தள்ளுபடி திட்டத்தில் 3.5 கோடி விவசாயிகள் பயனடைந்ததாக அரசு பெருமைபட்டுக் கொண்டது. ஆனால், அதுதொடர்பான சுமார் 90 ஆயிரம் கணக்குகளை தணிக்கை செய்த அதிகாரிகள், பல விவசாயிகள் இந்தப் பலன்களை பெற வில்லை என்று கண்டுபிடித்துள்ளனர். இதன்மூலம், மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடந்திருப்பதாக தணிக்கை துறை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மோசடி குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். மேலும், இந்த தணிக்கை அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் பாஜக வலியுறுத்தும்.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசின் முடிவு தேச நலன்களுக்கு விரோதமானது. குறிப்பாக விவசாயிகளை நேரடியாக பாதிக்கும் நடவடிக்கையாகும்.

எனவே, இந்த முடிவை பிரதமர் திரும்ப பெற வேண்டும். இதை இந்த அரசு செய்ய வில்லை எனில், மத்தியில் பாஜக ஆட்சிக்கு வரும்போது, அன்னிய நேரடி முதலீட்டுக்கான அனுமதி திரும்பப் பெறப்படும். டீசல் விலை உயர்வை பாஜக எதிர்க்கும் என்று தெரிவித்தார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

04.02.2013 A.M

## பந்தல் சாகுபடி திட்டத்தில் காய்கறி பயிர் சாகுபடி

திண்டுக்கல்: பந்தல் சாகுபடி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள காய்கறி பயிர்களை வேளாண்மை துறை ஆணையர் சந்தோஷ் பாபு ஆய்வு செய்தார்.திண்டுக்கல் மாவட்டம் ஊத்துப்பட்டி, பெருமாள் கோவில்பட்டி, பிள்ளையார் நத்தத்தில் பந்தல் சாகுபடி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மிளகாய், கத்திரி, தக்காளி பயிர் செய்யும் விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் தங்கள் காய்கறிகளை பயிர் செய்துள்ளனர்.

திராட்சை விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் தங்கள் தோட்டத்தில் சொட்டு நீர் பாசனத்தை அமைத்து அதன் மூலம் அதிக மகசூலை பெற்றுள்ளனர். இது தவிர தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணை திட்டம் பல்வேறு பகுதிகளில் செயல்படுத்தப்பட்டிருந்தது. இதன்மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ள காய்கறிகளின் தரத்தை ஆய்வு செய்த வேளாண்மை துறையின் ஆணையர் சந்தோஷ் பாபு, விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார். தேவைப்படும் இடுபொருட்கள், உரங்கள் போன்றவற்றை மானிய விலையில் வழங்குவதோடு, உயர் தொழில் நுட்பங்களை அமல்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் பெற்று தருவதாக உறுதியளித்தார்.

## கடலை விவசாயிகளுக்கு மானியத்தில் ஜிப்சம்

திண்டுக்கல்: கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்க வேளாண்மை துறையினர் முடிவு செய்துள்ளனர்.கடலை பயிர் செய்யும் விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக முழு விளைச்சலை பெற முடியாமல் தவிப்பில் உள்ளனர். இவர்களின் நிலங்களை ஆய்வு செய்த வேளாண்மை துறையினர் அடியுரம், மேலுரம், மண் அணைப்பு போன்றவற்றை முறையாக செய்யாததால் மகசூழ் குறைந்திருப்பதை கண்டுபிடித்தனர். பயிர் செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வழங்க முடிவு செய்துள்ளனர். ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்கப்படும். அந்தந்த பகுதிகளில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர்களை சந்தித்து தங்கள் நிலத்தின் பட்டா, விண்ணப்பம்,

போட்டோவுடன் மனு அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கடலை பயிருக்கு கால்சியம், சல்பர் சத்து அவசியம் என்பதால் மானிய விலையில் தரப்படும் ஜிப்சத்தை பெற்று விவசாயிகள் பயனடையுமாறு வேளாண்மை துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.நிரப்பப்படாத ஏ.டி.எஸ்.பி., பணியிடம்

## வாழையில் பூஞ்சாள நோய்: கட்டுப்படுத்தும் வழிமுறை

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுகா பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில் காணப்படும் பூஞ்சாள நோயைக்கட்டுப்படுத்த தோட்டக்கலை உதவி இயக்குனர் குமார வடிவேல் ஆலோசனை கூறியுள்ளார்.அவரது அறிக்கை: பூஞ்சாள நோய் தாக்கிய வாழையில் முதிர்ந்த இலைகள் பச்சை அல்லது மஞ்சள் நிறத்துடன் முறிந்து மரத்தின் தண்டைச் சுற்றி பாவாடை கட்டியது போல தொங்கும். தண்டின் அடிப்பாகத்தில் வெடிப்புகள் காணப்படும். நோய் தாக்கிய வாழையின் கிழங்குகள் நேர்முகமாகப் பிளந்து பார்த்தால் கருஞ்சிவப்பில் சிறுகோடுகள் இருப்பதைக் காணலாம்.வேர்கள் அழுகிவிடும், தூர்நாற்றம் வீசும். பூஞ்சாள வித்துக்கள் மண்ணில் பல ஆண்டுகள் உயிருடன் இருக்கும். வேரைக்குடையும் நூற்புழுக்கள் மண்ணில் இருந்து கொண்டு வாழையை அதிகமாக தாக்கி நோய் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறது.தடுப்பு முறை: கிழங்குகளை நோய் தாக்காத ரகங்களில் இருந்து தேர்ந்து எடுத்தல் அவசியம். கிழங்குகளின் மேற்பகுதியில் காணப்படும் கருஞ்சிவப்பு நிறக்குழிகள் நீங்கும் வரை சீவ வேண்டும். சீவிய கிழங்கை 0.1 சதவீத "எமிசான்' கரைசில் 15 நிமிடங்கள் முக்கிய பிறகு நடவேண்டும். வாடல் நோய் தாக்கிய வாழை வேரோடு பறித்து எரித்து விட வேண்டும்.கிழங்கு நடும் குழிகளில் ஒரு கிலோ சுண்ணாப்பு போட வேண்டும். நோய் தாக்கிய மரத்தை சுற்றியுள்ள மண்ணை மரத்தின் கிழங்கு பகுதி ஆரம்பிக்கும் இடம் தெரியுமாறு அகற்ற வேண்டும். கிழங்குப் பகுதியில் சாய்வாக ( 42 டிகிரி கோணம்) 10 செ.மீ., ஆழம் வரை துளையிட்டு அதில் 3 மி.லி. "கார்பன்டாசிம்', 2 சதக் கரைசலை (ஒரு லிட்டர் நீருக்கு 20 கிராம்) ஊசி போடும் குழல் மூலம் உட்செலுத்த வேண்டும்.அல்லது ஒரு கிராம் õர்பன்டாசிம் பவுடரை குழாய் மாத்திரை எனப்படும் கேப்சூல்களில் அடைத்து வாழைக் கிழங்கில் துளையிட்டு, உட் செலுத்தி துளையினை களிமண் கொண்டு பூசிவிட வேண்டும். இந்த முறையை ஒரு மாதம் கழித்து மீண்டும் ஒரு முறை செய்ய வேண்டும். "சூடோமோனஸ் புளுரோசன்ஸ்' அல்லது வாம் என்ற உயிரியில் கட்டுப்பாட்டு காரணிகளை ஒரு மரத்துக்கு 20 கிராம் வீதம் வேப்பம் புண்ணாக்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும் என தெரிவித்துள்ளார்.

## நெல் விளைச்சல் சரிவு: 14 அரிசி ஆலைகள் மூடல்

தேனி: தேனியில் மட்டும் நெல் விளைச்சல் சரிவால் 14 அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளன.தேனியில் 21க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் செயல்பட்டு வந்தன. இவர்கள் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்து, அவித்து காயப்போட்டு, அரிசியாக்கி விற்பனை செய்து வந்தனர். ஒவ்வொரு அரிசி ஆலைகளிலும் 50க்கும் மேற்பட்டோர் வேலை செய்து வந்தனர்.இந்நிலையில், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நெல் விளைச்சல் வீழ்ச்சி அடைந்து வருவதாலும், வெளி மாவட்டங்களில் இருந்து நெல் கொண்டு வந்து அரிசி அரைக்க அதிகரித்த செலவு, கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை, மின்தட்டுப்பாடு போன்றவைகளால் அரிசி மில்களுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டது. இதனால், இந்த மில்கள் படிப்படியாக மூடப்பட்டு வந்தன. தற்போது ஏழு மில்கள் மட்டுமே தேனியில் உள்ளன. இந்த மில்களுக்கு, வங்கிகள் கடன் கொடுத்து உதவுவதால் நெருக்கடியை தாக்குப்பிடித்து செயல்பட்டு வருகின்றன. வங்கிகள் கை விரித்தால் இந்த மில்களையும் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்,என நெல் அரிசி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## செண்டு மல்லி விலை வீழ்ச்சி கி.கிரி விவசாயிகள் கலக்கம்

கிருஷ்ணகிரி: தமிழகத்தில் திருவிழாக்கள் முடிந்ததாலும், சாகுபடி அதிகரிப்பாலும், செண்டுமல்லி விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நிலவும் சீதோஷணநிலை மலர் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது.
கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டணம், மத்தூர் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் குண்டு மல்லி சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் மூன்று மாதத்தில் பலன் தரக்கூடிய குட்டை ரக செண்டு மல்லி அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
செண்டு மல்லியில் கட்டப்படும் மாலைகள் திருவிழா காலங்களில் அதிக அளவில் விற்பனையாகும். விழா காலங்களில் ஒரு கிலோ செண்டுமல்லி, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும். இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் செண்டுமல்லி சென்னை, திருவண்ணாமலை மற்றும் மதுரை, சேலம் ஆகிய பகுதிகளுக்கு விற்பனைக்கு செல்லும்.
கடந்த வாரம் கிருஷ்ணகிரி மார்க்கெட்டில் ஒரு கிலோ செண்டுமல்லி, 20 ரூபாய்க்கு விற்பனையானது.

கடந்த சில நாட்களாக தமிழக அளவிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருவிழாக்கள் ஏதும்

இல்லாததால் செண்டு மல்லி மாலைக்கு வரவேற்பு குறைந்தது.இதனால், மார்க்கெட்டில் செண்டுமல்லி பூவை வாங்க பூ கடைக்காரர்கள் ஆர்வம் காட்டவில்லை. வெளி மாவட்ட மார்க்கெட்டிலும் செண்டுமல்லிக்கு போதிய வரவேற்ப்பு இல்லாத நிலையில் அதன் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.நேற்று கிருஷ்ணகிரி மார்க்கெட்டில் ஒரு கிலோ செண்டுமல்லி நான்கு ரூபாய்க்கு விற்பனையானது. அதே நேரம் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதால், சந்தைக்கு விற்பனைக்கு அதிக அளவில் செண்டு மல்லி வரத்துவங்கியுள்ளது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

## காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி

ஈரோடு: காளான் வளர்ப்புக்கான பயிற்சி ஈரோட்டில், ஆறு நாட்கள் நடக்கிறது.மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதல்படி கனரா வங்கி நடத்தும் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி ஃபிப்., 11 முதல், 16 வரை ஆறு நாட்கள், ஈரோடு அசோகபுரம் சரஸ்வதி வித்யாலயா சிறுவர் பள்ளி வளாகத்தில் நடக்கிறது. சுயதொழில் செய்ய விரும்புவோர், இளைஞர்கள், பெண்கள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.இப்பயிற்சி பெற எவ்வித கல்வித்தகுதியும் தேவையில்லை. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் அனைவரும் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசம். பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.மேலும் விபரங்களுக்கு பயிற்சி நிலைய தொலைபேசி எண், 0424 2290338 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம், என கனரா வங்கி முதுநிலை மேலளார் பூபாலன் தெரிவித்துள்ளார்.

## வறட்சியை சமாளிக்க புதிய நீர்மேலாண்மை அவசியம்

ஊட்டி:""வறட்சியை சமாளிக்க, விவசாய நிலங்களில், புதிய தொழில்நுட்ப நீர் மேலாண்மை முறையை கையாள வேண்டும்," என முதன்மை விஞ்ஞானி மயில்சாமி கூறினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக நீர் நுட்ப மையம் சார்பில், ஊட்டி மத்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் மூலம், ஊட்டி திருச்சிகடி பழங்குடியின கிராமத்தில், நீர் மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

இதில், நிலத்தடி நீர் ஆராய்ச்சி திட்ட முதன்மை விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி பேசுகையில், ""மழை குறைந்து, வறட்சி தலைதூக்கியுள்ள நிலையில் நீர் பாசன முறையில், புதிய தொழில்நுட்பங்களை கையாள வேண்டும். சொட்டு நீர் பாசன முறையில், செடிகளின் வேருக்கு மட்டும் நீரை பாய்ச்ச தொழில்நுட்பங்களை, பயன்படுத்த வேண்டும்," என்றார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை., நீர் நுட்ப மைய இயக்குனர் டாக்டர் செல்லமுத்து பேசுகையில்,""தற்போதைய நிலையில், காலநிலையில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன; மழை குறைந்துள்ளது. பருவம் தவறி மழை பெய்கின்றன. சில நாட்கள் பெய்ய வேண்டிய மழை, ஒரே நாளில் பெய்துவிடுகிறது. இதனால், விவசாய நிலங்களில் வறட்சி தென்படுகிறது. இதை தவிர்க்க நீர் மேலாண்மையில் புதிய யுக்திகளை கையாள வேண்டும். சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறைகளை மேற்கொள்ள வேண்டும். நீர் மேலாண்மையில், மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மையத்தினர் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்; இவற்றை விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். நீர் வள ஆதாரங்கள் குறைந்து வரும் நிலையில், இத்தகைய தொழில்நுட்பங்கள் அவசியமாகின்றன. தவிர, விவசாய விளைப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததால், மார்கெட்டிங் யுக்தியிலும் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்," என்றார்.

ஊட்டி, மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி மைய அதிகாரி (பொறுப்பு) டாக்டர் சுந்தராம்பாள், விஞ்ஞானிகள் செல்வி, வள்ளியம்மை பேசினர்.

### வறட்சியால் தேயிலை மகசூல் குறைவு

கோத்தகிரி:மாவட்டத்தில் வறட்சி தொடர்வதால், தேயிலை தோட்டங்களில் மகசூல் வெகுவாக குறைந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதானமாக உள்ளது.தேயிலை தொழிலை நம்பிதான் மாவட்டத்தின் பொருளாதாரம் உள்ளது.60 ஆயிரம் சிறு விவசாயிகள் இதனை நம்பியே வாழ்வை நகர்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், தேயிலை வாரியம் மற்றும் உபாசி மூலம் கிராமங்கள் தோறும் தரமான பசுந்தேயிலை பறிப்பது குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தியதன் விளைவாக, விவசாயிகள் பெரும்பாலும் தரமான பசுந்தேயிலையை தொழிற்சாலைகளுக்கு வினியோகித்து வருகின்றனர்.

இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு சராசரியாக 15 ரூபாய்க்கும் குறையாமல் விலை கிடைத்து வருகிறது. இந்த மாற்றத்தால், நலிவில் இருந்த தேயிலை தொழில் கடந்த 10 ஆண்டுகளுக்கு பின்பு, ஓரளவு மேம்பட துவங்கி உள்ளது. நீலகிரி மாவட்ட தேயிலையை வாங்க, ரஷ்யா, பாகிஸ்தான் உட்பட பல்வேறு உலகநாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

எனினும், பசுந்தேயிலைக்கு கிடைத்து வரும் விலை போதுமானதாக இல்லை.தோட்ட பராமரிப்பு செலவு, இடுப்பொருட்களின் விலையேற்றம், தொழிலாளர் பற்றாக்குறையால் கூலி உயர்வு போன்றவை காரணமாக, விவசாயிகள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், நடப்பாண்டு பருவமழை பொய்த்ததன் காரணமாக, விவசாய நிலங்களில் ஈரப்பதம் குறைந்து, மகசூல் வெகுவாக குறைந்துள்ளது.பசுந்தேயிலைக்கு ஓரளவு விலை இருந்தும், மகசூல் குறைந்துள்ளதால், தற்போது விவசாயிகள் தேவையான அளவுக்கு பசுந்தேயிலையை, தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்ய முடியாத நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால், கடந்த இரண்டு மாதங்களாக, பொருளாதார நெருக்கடியையும் சந்தித்து வருகின்றனர்.

பிப்ரவரி மாதத்தில் பெய்ய வேண்டிய ஒரிரு மழை பெய்தால்தான், தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. ஆனால், தற்போது பகல் நேரங்களில் வெயிலும், அதிகாலை நேரங்களில் கடும் பனிப்பொழிவும் அதிகரித்துள்ளதால், தேயிலை கருகி மகசூல் வெகுவாக குறையும் அபாயம் உருவாகி வருகிறது.

இதேநிலை நீடிக்கும் பட்சத்தில், தேயிலை செடிகள் பட்டுப்போக வாய்ப்புள்ளதால், மழை பெய்யாத பட்சத்தில், விவசாயிகளுக்கு மீண்டும் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இதனால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறு விவசாயிகள் மழை வேண்டி, சிறப்பு பூஜைகளிலும், பிரார்த்தனைகளிலும் ஈடுபட துவங்கி உள்ளனர். வருண பகவான் மனம் வைத்தால் மட்டுமே மலை மாவட்ட விவசாயிகளை கவலையில் இருந்து விடுவிக்க முடியும்.

## தேயிலை ஏல விலையில் மாற்றமில்லை

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏலத்தில் விலையில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை.

குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் ஐந்தாம் ஏலம் கடந்த 31 மற்றும் பிப். 1ம் தேதி நடந்தது. இதில், மொத்தம் 15.69 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 11.17 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.52 லட்சம் கிலோவும் அடங்கும்.

மொத்தம் 15.69 லட்சம் கிலோ தேயிலை தூளில் 88 சதவீதம் விற்பனையானது. இந்த வாரம் விலையில் மாற்றம் இருக்க வில்லை. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 252 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக சாம்ராஜ் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 250 ரூபாயும் விலை கிடைத்தது.

சராசரியாக சாதாரண ரகத்துக்கு 85 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை கிடைத்தது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 86 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 105 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விலை கிடைத்தது.

வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடக்கும் ஆறாவது ஏலத்துக்கு மொத்தம் 14.02 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் 10.41 லட்சம் கிலோ இலை ரகமும், 3.61 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.

## விலை உயரும் எலுமிச்சைப் பழம்: கோடைக்கு முன்பே தட்டுப்பாடு

கரூர்: தமிழகத்தில் கடந்தாண்டு பருவமழை தவறியதால், கோடைகாலம் துவங்கும் முன், எலுமிச்சை பழத்தின் வரத்து குறைந்துள்ளது. இதனால், வரும் கோடைக்காலத்தில் எலுமிச்சை பழத்தின் விலை ஜெட் வேகத்தில் உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.கடந்தாண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் தென் கிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், நெல், பயறு வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்களின் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. இந்நிலையில், பருவமழை தவறியதால், எலுமிச்சை பழத்தின் சாகுபடி குறைந்துள்ளது. தற்போது தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சேலம் மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இருந்தும் எலுமிச்சை பழம். கரூர் மாவட்டத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.கடந்த மாதம் கிலோ, 50 ரூபாய் வரை விற்கப்பட்ட எலுமிச்சை பழம், சில்லறையில் ஒரு பழம், இரண்டு ரூபா ய் முதல், மூன்று ரூபாய் வரை விற்கப்பட்டது. கோடைக்காலம் துவங்கும் நிலையில், கரூர் மாவட்டத்துக்கு வழக்கமாக வரும் எலுமிச்சை பழம் வரத்து குறைந்துள்ளது. இதனால் மொத்த விø லயில் தரத்துக்கு ஏற்ப கிலோவுக்கு, 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.இதுகுறித்து வியாபாரிகள் கூறியகையில், ""எலுமிச்சை பழம் பொதுவாக மானாவரி நிலம், தோட்டப்பகுதிகள், வாய்க்கால் ஓரங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை எலுமிச்சை பழங்கள் சாகுபடிக்காக, தனியாக தோட்டம் அமைப்பது குறைவு. மழையை நம்பிதான், எலுமிச்சை பழம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், கடந்தாண்டு

போதிய மழை இல்லாததால், எலுமிச்சை பழம் சாகுபடி குறைந்து விட்டது. இதனால், கரூருக்கு குறைந்தளவே எலுமிச்சை பழம் விற்பனைக்கு வருகிறது. இதனால், விலையும் சற்று அதிகரித்துள்ளது. வழக்கமாக ஆண்டுதோறும் கோடைக்காலம் ஆரம்பித்த பிறகுதான், எலுமிச்சை பழத்தின் விலை அதிகரிக்கும். ஆனால் கோடைக் காலம் தொடங்கும் முன்பு தற்போது, விலை அதிகரித்துள்ளது. வரும், பிப்ரவரி மாதம் கோடைக்காலத்தின் பாதிப்பு இருக்கும் நிலையில், எலுமிச்சை பழத்தின் விலை மேலும் உயர வாய்ப்புண்டு," என்றனர்.

## கொள்முதல் விலை உயருமா? கடப்பாக்கம் பதநீர் உற்பத்தியாளர்கள் எதிர்பார்ப்பு

செய்யூர்:கடப்பாக்கம் பதநீர் கொள்முதல் நிலையத்தில், "பதநீர்' கொள்முதல் செய்யும் பணி துவங்கியது. இந்நிலையில், ஒரு லிட்டருக்கான கொள்முதல் விலையை, 10 ரூபாயி லிருந்து 15 ரூபாயாக உயர்த்த வேண்டும்; உற்பத்தியாகும் பதநீர் அனைத்தையும், கொள்முதல் செய்ய, அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என, பதநீர் உற்பத்தியாளர்கள் கோரியுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது இடைக்கழிநாடு பேரூராட்சி. இதில், 24 கிராமங்கள் உள்ளன. இங்கு பனை மரங்கள் ஏராளமாக உள்ளன.

இங்கு உற்பத்தியாகும் பதநீரை கொள்முதல் செய்து, மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் 1968ம் ஆண்டு, சென்னை பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் சார்பில், பனஞ்சீனி சர்க்கரை ஆலை துவக்கப்பட்டது.

70 சென்ட்டில்...

இதனால் பதநீர் பனஞ்சீனியாகவும், பனைவெல்லமாகவும் மாற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இதற்கென ஒரு ஏக்கர் 70 சென்ட் பரப்பளவில் ஆறு கட்டடங்கள் கட்டப்பட்டது. கடப்பாக்கம், வேம்பனூர், கோட்டைக்காடு, வெண்ணாங்குபட்டு, கரும்பாக்கம், நல்லூர், புத்தோட்டம், சேம்புலிபுரம், கெங்கதேவன்குப்பம், விளம்பூர், பனையூர், முதலி யார்குப்பம், வெடால், தேன்பாக்கம், கொளத்தூர் ஆகிய இடங்களில் உற்பத்தி ஆகும் பதநீர் கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக, அரசு போதிய நிதி ஒதுக்காததால், பனஞ்சீனி சர்க்கரை ஆலை செயல்படவில்லை.

இதனால் பனை பொருட்கள் உற்பத்தியும் நின்று, பதநீரும் முழுமையாக கொள்முதல் செய்யப்படவில்லை. உற்பத்தியாகும் பதநீரை, முழுமையாக கொள்முதல் செய்ய வேண்டும் என, பதநீர் உற்பத்தியாளர்கள், அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

பாக்கெட்டுகளில்...

அதைத் தொடர்ந்து 2010ம் ஆண்டு டிசம்பர் 22ம் தேதி, கடப்பாக்கத்தில் பனை தொழிலாளர்களுக்கு, இயந்திரம் மூலம் பனை ஏறும் பயிற்சியும், மற்றும் பதநீர் நிரப்பும் மையமும் ஏற்படுத்தப்பட்டன.

இங்கு, பதநீர் டின்களில் நிரப்பப்பட்டு எழும்பூரில் உள்ள பதநீர் கூட்டுறவு இணையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. அங்கு, அவை பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி, பதநீர் கொள்முதல் துவங்கியது. ஒரு லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டது. உற்பத்தியாகும் பதநீர், முழுமையாக கொள்முதல் செய்யப்படாததால் பனையேறிகள் பாதிப்பிற்குள்ளாயினர்.

லிட்டர் ரூ.10

இந்த ஆண்டு ஜன., 31ம் தேதி, பதநீர் கொள்முதல் துவக்கப்பட்டது. கடப் பாக்கம், கப்பிவாக்கம், வேம்பனூர், கோட்டைக்காடு, விளம்பூர், முதலியார்குப்பம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பதநீர் தயாரிக்கின்றனர்.

சென்ற ஆண்டு, ஒரு லிட்டர், 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

இது குறித்து முதலியார்குப்பத்தைச் சேர்ந்த பனையேறி ஒருவர் கூறியதாவது:

ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை பதநீர் இறக்கப்படுகிறது. சென்ற ஆண்டு இரண்டு லட்சம் லிட்டர் கொள்முதல் செய்வதாக தெரிவித்தனர். ஆனால், ஒரு லட்சம் லிட்டர் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

இங்குள்ள பதநீர் நிரப்பும் மையம், துவக்கிய ஆண்டு மட்டும் செயல் பட்டது; சென்ற ஆண்டு செயல்படவில்லை. இத் தொழிலை நம்பி ஏராளமானவர்கள் உள்ளனர்.

உற்பத்தியாகும் பதநீர் முழுமையாக கொள்முதல் செய்யப்படாததால், மீதமுள்ள பதநீரை வீணாக கொட்டும் அவல நிலை ஏற்படுகிறது.

கெடுபிடி

இந்த ஆண்டு துவக்கி மூன்று நாட்கள் கூட ஆகவில்லை. ஆனால், கள் இறக்குவதாக கூறி போலீசார் எங்களை தொந்தரவு செய்கின்றனர். பதநீர் இறக்கும் உரிமத்தை காண்பித்தால் கூட, போலீசார் விட மறுக்கின்றனர். மரம் ஏறும்வடம், கத்தி, கலையம், சுண்ணாம்பு போன்றவை விலையேறி விட்டது.

இதனால், ஒரு லிட்டருக்கான பதநீர் கொள்முதல் விலையை 10 ரூபாயிலிருந்து 15 ரூபாயாக

உயர்த்த வேண்டும்.
உற்பத்தியாகும் பதநீர் கொள்முதல் அனைத்தையும், கொள்முதல் செய்ய, அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கல்

திருவள்ளூர்:மானிய விலையில், 27 விவசாயிகளுக்கு, 38 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேளாண் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் <உபகரணங்கள் வழங்கப்பட்டன.
தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், 16 லட்சம் ரூபாய் மானியத்தில், 38 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.
இதன்படி, 27 விவசாயிகளுக்கு மினி டிராக்டர், பவர் வீடர், மரம் அறுக்கும் கருவி, ரோட்ட வேட்டர், பவர் ஸ்பிரேயர், பவர் டிரில்லர், பிரஸ் கட்டர் போன்ற வேளாண் கருவிகளை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் ரமணா வழங்கினார்.
நிகழ்ச்சியில், மாவட்ட வேளாண் செயற்பொறியாளர் ஆதித்தன், உதவி செயற் பொறியாளர் பிரசாத், பிரதாபன், சிங்காரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பருவமழை பொய்த்ததால் தண்ணீரின்றி கரும்பு கருகுவதால் விவசாயிகள் கவலை

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு பயிர் தண்ணீரின்றி காய்ந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கள்ளக்குறிச்சி பகுதியில் முக்கிய தொழிலாக விவசாயம் உள்ளது. இப்பகுதி விவசாயிகளின் நீர் ஆதாரமாக கோமுகி, மணிமுக்தா அணைகள் உள்ளது. கோமுகி அணையை நம்பி 30 கிராமங்களில் 10 ஆயிரத்து 860 ஏக்கர் நிலமும், மணிமுக்தா அணை பாசனத்தை நம்பி 9 கிராமங்களில் 4,250 ஏக்கர் நிலமும் பாசனம் பெறுகிறது.
பருவ மழையின்போது அணைகளில் தண்ணீர் தேக் கப்பட்டு பாசனத்திற்கு திறந்துவிடப்படுகிறது. அதேபோல் ஏரி மற்றும் கிணற்று பாசனத்தின் மூலமும் இப்பகுதியில் விவசாயம் செய்யப்படுகிறது.
இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகளை பெரிதும் ஏமாற்றியுள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் பயிர் செய்ய முன்வரவில்லை.

பயிரிடப்பட்ட நிலங்களில் தண்ணீர் இல்லாமல் கரும்பு பயிர்கள் காய்ந்து வருகிறது. இதனால் கள்ளக்குறிச்சி அடுத்த மேலூர், இந்திலி, நல்லாத்தூர், நமச்சிவாயபுரம், புக்கரவாரி, சிறுவத்தூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கிணற்று பாசனத்தை நம்பி பயிர் செய்யப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் கரும்பு பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்துள்ளது. கோடை துவங்குவதற்கு முன்பே கரும்புகள் காயும் நிலையில், கோடை யில் ஏரி மற்றும் கிணறுகளின் நீர்மட்டம் முற்றிலும் குறைந்துவிடும் என்பதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

## கரும்பில் இடைக்கணு புழுவை அழிக்க ஒட்டுண்ணி முறையை பயன்படுத்தலாம் வேளாண் அதிகாரி அறிவுரை

அவலூர்பேட்டை:கரும்பில் இடைக்கணு புழுவை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒட்டுண்ணியை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம் என வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

மேல்மலையனூர் வட்டாரத்தில் 5,575 எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் ஏக்கருக்கு 1200 மெட்ரிக் டன் பெறுவதற்காக செம்மை சாகுபடி மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும்.

தொழில் நுட்ப பயிற்சி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் ராஜ் ஸ்ரீசுகர்ஸ் மூலம் வழங்கப்படுகிறது. மக்கிய தொழு உரம், மண்புழு உரத்தை பயன்படுத்தினால் மண் வளம் பெருகும் அதிக விளைச்சலும் கிடைக்கும். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் மண்புழு உற்பத்தி கூடராம் அமைக்க 50 சதவீதம் மானியத்தில் 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க 50 சதவீத மானியத்தில் 2425 ரூபாய் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களது வேளாண் மற்றும் கால்நடை கழிவுகளை முறையாக மக்க வைத்து பயன் படுத்தி கொள்ள முன்வர வேண்டும். கரும்பில் காணப்படும் இடைக்கணு புழுவை கட்டுப்படுத்த எந்த ரசாயன பூச்சி மருந்துகளாலும் 100 சதவீதம் முடியாது.

ஒட்டுண்ணி விடுவதால் மட்டுமே 100 சதவீதம் இந்த புழுவை ஒழிக்க முடியும். சுற்று புற சூழல் மாசு படுவதையும் தவிர்க்கலாம்.

அவலூர்பேட்டை அடுத்த தாயனூர் கிராமத்தில் ஒட்டுண்ணி உற்பத்தி மையம் உள்ளது. இங்கு செம்மேடு ராஜ்ஸ்ரீசுகர்ஸ் கரும்பு ஆலை விவசாயிகள் ஒட்டுண்ணியை பெற்று இடைக்கணு புழுவை கட்டுப்படுத்தி பயனடையலாம்.

## மிளகாய் வற்றலுக்குமூன்று ஆண்டுகளாக ஒரே விலைகொளத்தூர் விவசாயிகள் அதிர்ச்சி

மேட்டூர்: மிளகாய் வற்றல், மூன்று ஆண்டுகளாக, ஒரே விலைக்கு கொள்முதல் செய்யப்படுவதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.கொளத்தூர் சுற்றுப்பகுதியில் ஆண்டுதோறும், 1,000 ஏக்கருக்கு மேல் மிளகாய் சாகுபடி செய்யப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி இறுதியில், மிளகாய் வற்றல் கொளத்தூர் சந்தைக்கு விற்பனைக்கு வர துவங்கும்.

கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், கொளத்தூர் பகுதியில், கிணற்று பாசன விவசாயிகள், சொட்டுநீர் குழாய் அமைத்துள்ள விவசாயிகள் மட்டுமே மிளகாய் சாகுபடி செய்தனர். இதனால், வழக்கத்தை விட மிளகாய் சாகுபடி பரப்பு, 40 சதவீதம் வரை குறைந்து விட்டது.தற்போது, அறுவடை துவங்கிய நிலையில், விவசாயிகள் கொளத்தூர் சந்தைக்கு மிளகாய் வற்றலை விற்பனைக்கு கொண்டு வர துவங்கியுள்ளனர். கடந்த 2011ல் ஃபிப்ரவரி மாதம் சீஸன் துவங்கிய போது, ஒரு கிலோ மிளகாய் வத்தல், 80 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த ஆண்டும் சீஸன் துவங்கத்தில், சந்தையில் மிளகாய் வற்றல், ஒரு கிலோ, 70 முதல் 80 ரூபாய்க்கு விற்பனையானது.

நடப்பாண்டு, கொளத்தூர் சந்தைக்கு மிளகாய் வற்றல் விற்பனைக்கு வர துவங்கியுள்ள நிலையில், அதிகபட்சமாக ஒரு கிலோ, 80 ரூபாய்க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. நடப்பாண்டு சாகுபடி பரப்பு குறைந்த நிலையில், பற்றாக்குறை காரணமாக, வற்றல் விலை அதிகரிக்கும், என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.

கடந்த இரு ஆண்டுகளை போல, நடப்பாண்டும் அதே விலைக்கு மிளகாய் வற்றலை வியாபாரிகள் கொள்முதல் செய்ததால், விவசாயிகளை அதிர்ச்சியடைந்துள்ளனர். வெளிமாவட்ட வியாபாரிகள் வரும் வாரங்களில்தான், கொளத்தூர் சந்தைக்கு வருவார்கள். சீஸன் இறுதியில், மிளகாய் வற்றல் விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அவரை பருப்பு விலைஇரு மடங்கு உயர்வு

நங்கவள்ளி: வறட்சி காரணமாக நங்கவள்ளி சந்தையில், அவரை பருப்பு விலை இரட்டிப்பாகியுள்ளது.நங்கவள்ளி, ஜலகண்டபுரம், மேச்சேரி சுற்றுப்பகுதியில் வறண்ட நிலப்பகுதிகளில் அவரை சாகுபடி செய்யப்படும். நடப்பாண்டிலும் நங்கவள்ளி சுற்றுப்பகுதியில், அவரை சாகுபடி செய்யப்பட்டது.போதிய மழை பெய்யாததால், பெரும்பாலான இடங்களில் அவரை செடிகள் கருகி விட்டது. இதனால், நடப்பாண்டு நங்கவள்ளி சந்தைக்கு, அவரை பருப்பு

வரத்து குறைந்து விட்டது. அதற்கேற்ப, கடந்த ஆண்டு ஒரு கிலோ, 40 ரூபாயாக இருந்த அவரை பருப்பு நடப்பாண்டு கிலோ, 80 ரூபாயாக அதிகரித்துள்ளது.துவரை, உளுந்து உள்ளிட்ட பருப்பு வகைகளை விட, அவரை பருப்பு விலை குறைவாகவே இருக்கும். நடப்பாண்டில் வறட்சி காரணமாக, உற்பத்தி குறைந்ததால், அவரை பருப்பு துவரை, உளுந்து போன்றவற்றுக்கு இணையாக விலை அதிகரித்துள்ளது.

## கொ.புரத்தில் பருத்தி ஏலம்ரூ.7 கோடிக்கு விற்பனை

இடைப்பாடி: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 37 ஆயிரம் பருத்தி மூட்டைகள், 7.03 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை, கொங்கணாபுரத்தில் உள்ளது. இங்கு, வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று நாட்களில் நடந்த பருத்தி ஏலத்தில், 37 ஆயிரத்து, 204 பருத்தி மூட்டைகள் கலந்து கொண்டன.ஏலத்தில், பி.டி., ரக பருத்தி குவிண்டால், 3,860 முதல், 4,380 ரூபாய் வரையும், சுரபி ரக பருத்தி குவிண்டால், 4,270 முதல், 5,180 ரூபாய் வரையும், டி.சி.எச்., ரக பருத்தி, குவிண்டால், 4,700 முதல், 5,250 ரூபாய் வரையும் ஏலம் போனது.மூன்று நாட்கள் நடந்த ஏலத்தில், ஏழு கோடியே மூன்று லட்சத்து, 32 ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது.

## இயற்கை விஞ்ஞானி ஆலோசனை மழை ஈர்ப்பு மையம் அமைக்க வேண்டும்

நாமக்கல்: ""மழை பெற, சாலையோரங்களில், மழை ஈர்ப்பு மையங்களை அமைக்க வேண்டும்," என, ஆலோசனைக் கூட்டத்தில், திருப்பூர் இயற்கை விஞ்ஞானி பேசினார்.

மாவட்ட மரம் மற்றும் மூலிகை வளர்ப்போர் நலசேவை சங்க ஆலோசனை கூட்டம், நாமக்கல்லில் நடந்தது. சங்க நிறுவனர் சத்யமூர்த்தி தலைமை வகித்தார். செயலாளர் தில்லை சிவக்குமார் வரவேற்றார். ஈரோடு மாவட்ட பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி முன்னிலை வகித்தார்.திருப்பூர் இயற்கை விஞ்ஞானி சாமியப்பன் பேசியதாவது:

மத்திய, மாநில அரசுகள், தேசிய மற்றும் குறுக்கு சாலைகளில் பல கோடி ரூபாய் மதிப்பில், சாலைகள் அமைக்கின்றது.

ஆனால், மழை இருப்பு மையங்களை அமைப்பதில்லை. பனை மரம், உச்சிமரம், ஆலமரம், அரசமரம், அத்திமரம் போன்ற மரங்களை நட்டு பராமரித்து வந்தால், மழை பெறமுடியும்.மனிதன் வாழ்வதற்கு, உணவு, உடை, இருக்க இடம் ஆகியவற்றை தருவது மரங்களே. மரம் இருந்தால்

மட்டுமே, மனிதகுலத்தை காப்பாற்ற முடியும். இயற்கையை உணர்ந்தும், தேவையை குறைத்தும், இயற்கையுடன் ஒன்றி வாழவேண்டும். சாலையோரங்களில், மழை ஈர்ப்பு மையங்களை உருவாக்க வேண்டும்.பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு, மரம் வளர்ப்பு குறித்து பல்வேறு போட்டிகள் நடத்த வேண்டும். தரிசு நிலங்களில், மழை ஈர்ப்பு மரங்களை நட்டு பராமரிக்க வேண்டும். மரம் வளர்ப்பு திட்டங்களுக்கு, அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், குட்டை தூர்வார்தல் போன்ற பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. அவர்களை, மழை ஈர்ப்பு மரங்களை நட்டு பராமரிக்க பயன்படுத்த வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும்போது, மழை பெற வாய்ப்பு ஏற்படும்.இவ்வாறு அவர் பேசினார்.சேவை மைய நிர்வாகிகள், உறுப்பினர்கள், இயற்கை ஆர்வலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்குபயிற்சி முகாம்

அரூர்: அரூர் அரசு கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் வணங்காமுடி தலைமை வகித்தார். உதவி இயக்குனர் அர்த்தநாரி வரவேற்றார். கால்நடை உதவி மருத்துவர் தசரதன் விவசாயிகளுக்கு கால்நடைகள் பராமரிப்பது குறித்து பயிற்சி அளித்தார்.

கால்நடை தீவனமாக அசோலா பாசியை பயன்படுத்துவது குறித்தும், அசோலா வளர்ப்பு குறித்தும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு அசோலா வளர்ப்பு குறித்த கையேடு வழங்கப்பட்டது.கால்நடை மருத்துவர்கள் ராமகிருஷ்ணன், கனகசபை, பூபாலன், ஜான் விவிலியன், விஜயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நெல் சாகுபடி பரப்பு 27 சதவீதம் குறைந்தது:போதிய அளவிற்கு பருவ மழை இல்லாததால்



புதுடில்லி:நடப்பு ரபி பருவத்தில், ஆந்திரா, கர்நாடகா, மேற்கு வங்கம் உள்ளிட்ட, ஒரு சில மாநிலங்களில், போதிய அளவிற்கு, மழை இல்லாததாலும், ஒரு சில மாவட்டங்களில், வறட்சி ஏற்பட்டுள்ளதாலும், நெல் சாகுபடி பரப்பளவு, 27 சதவீதம் சரிவடைந்துள்ளது.

மகாராஷ்டிரா:அதிக அளவில், நெல் உற்பத்தியாகும், ஆந்திரா, கர்நாடகா, மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில், நடப்பு ரபி பருவத்தில் நெல் உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு ரபி பருவத்தில், மேற்கண்ட மாநிலங்களில், ஒட்டுமொத்த அளவில், நெல் சாகுபடி பரப்பளவு, 14.76 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.இது, கடந்த ஆண்டின், இதே பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடி பரப்பளவை (20.42 லட்சம் ஹெக்டேர்) விட, 27 சதவீதம் குறைவாகும் என, மத்திய வேளாண் அமைச்சகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.ஆந்திர மாநிலத்தில், நடப்பு ரபி பருவத்தில், நெல் சாகுபடி பரப்பளவு, கடந்த ஆண்டின், இதே பருவத்தை விட, 26 சதவீதம் சரிவடைந்து, அதாவது, 9.08 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 6.68 லட்சம் ஹெக்டேராக குறைந்து உள்ளது.இதே காலத்தில், கர்நாடகாவில், இதன் சாகுபடி பரப்பளவு, 1.27 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 79 ஆயிரம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.

மேற்கு வங்கத்தில், இது, 7 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 4.30 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.இருப்பினும், தமிழகத்தில், நெல் சாகுபடி பரப்பளவு, கடந்த ஆண்டின், ரபி பருவத்தை போன்று, 76 ஆயிரம் ஹெக்டேர் என்ற அளவில் மாற்றம் இன்றி உள்ளது.கோதுமை சாகுபடி:நாடு தழுவிய அளவில் பருப்பு வகைகள், கடுகு, சோளம், பார்லி மற்றும் மக்காச் சோளம் உள்ளிட்ட, இதர தானியங்களின் சாகுபடி பரப்பளவு, கடந்த ஆண்டின், ரபி பருவத்தை விட, அதிகரித்துள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஒட்டுமொத்த அளவில், கோதுமை சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

என்றாலும், நாட்டின் கோதுமை உற்பத்தி, கடந்த ஆண்டை போன்று, 9.40 கோடி டன்னாக இருக்கும் என, மத்திய அரசு, அண்மையில் தெரிவித்திருந்தது.மக்காச்சோளம்:உள்நாட்டில், சோளம் பயிரிடும் பரப்பளவு, பிப்ரவரி 1ம் தேதி வரையிலுமாக, 38.81 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின், இதே பருவத்தில், 37.65 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதே காலத்தில், மக்காச் சோளம் பயிரிடும் பரப்பளவு, 12.58 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 14.28 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

பார்லி, சாகுபடி பரப்பளவு, 7.94 லட்சம் ஹெக்டேராகவும் (7.84 லட்சம் ஹெக்டேர்), இதர பருப்பு வகைகளின் சாகுபடி பரப்பளவு, 93.20 லட்சம் ஹெக்டேராகவும் (89.58 லட்சம் ஹெக்டேர்),

பச்சை பயிறு சாகுபடி பரப்பளவு, 5.72 லட்சம் ஹெக்டேராகவும் (5.34 லட்சம் ஹெக்டேர்) உயர்ந்துள்ளன.

தானிய உற்பத்தி:அதேசமயம், உளுந்து சாகுபடி பரப்பளவு, 9.31 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 7.43 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.கடந்த ஆண்டு, நாட்டின், ஒட்டு மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி, 26 கோடி டன்னாக இருந்தது. இதில், நெல் மற்றும் கோதுமை ஆகியவற்றின் உற்பத்தி, சாதனை அளவாக, முறையே, 10.40 கோடி டன் மற்றும் 9.40 கோடி டன் என்ற அளவில் இருந்தது என, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## வெங்காயம் விலை விர்ர்... கட்டுப்படுத்த அரசு முயற்சி



புதுடில்லி:வெங்காயத்தை வெட்டும்போது தான் கண்களில் கண்ணீர் வரும் என்பதில்லை. சந்தையில், அதை வாங்கும்போதே, கண்ணீர் வந்து விடுகிறது. அந்த அளவிற்கு வெங்காயம் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.கடந்த ஆண்டு, இதே காலத்தில் மொத்த விற்பனையில், 4 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ வெங்காயம், தற்போது 25 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, சில்லரை விற்பனையில், 35 - 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

சென்ற ஒரு மாதத்தில் மட்டும், வெங்காயம் விலை 57 சதவீதம் உயர்ந்துள்ளது.கர்நாடகா:மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்கள் தான் வெங்காய உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. ஆனால், கடுமையான வறட்சி காரணமாக, இம்மாநிலங்களில் வெங்காய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சந்தையில் வெங்காய வரத்து குறைந்து, அதன் விலை அதிகரிக்க வழி வகுத்துள்ளது.கடந்த 2010ம் ஆண்டு, இறுதியிலும், இதே நிலை ஏற்பட்டது. ஒரு கிலோ வெங்காயம், 100 ரூபாய்க்கு விற்பனையானது. இதையடுத்து, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற அண்டை நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் தடை

விதிக்கப்பட்டது.உள்நாட்டில், நிலைமை ஓரளவு சீராகி, வெங்காய உற்பத்தி அதிகரித்ததும், அதன் ஏற்றுமதிக்கு மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டது. அதே சமயம், உள்நாட்டில் வெங்காயம் தட்டுப்பாடின்றி கிடைக்கும் வகையில், குறைந்தபட்ச ஏற்றுமதி விலை நிர்ணயிக்கப்பட்டது. ஏற்றுமதி விலை:பின்னர் இது, சர்வதேச போட்டியை சமாளிக்கும் வகையில் படிப்படியாக குறைக்கப்பட்டது. இந்நிலையில், உள்நாட்டில் வெங்காய உற்பத்தி அதிகரித்து, அதன் விலை வீழ்ச்சி கண்டது.இதையடுத்து, ஏற்றுமதியாளர்களின் கோரிக்கையை ஏற்ற மத்திய அரசு, கடந்த ஆண்டு ஜூன் மாதம், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியது.இதனால், வெங்காயம் தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், உள்நாட்டில், வெங்காய வரத்து குறைந்ததால், அதன் விலை உயர்ந்துள்ளது."இது தற்காலிகமானது. வெங்காயம் வரத்து விரைவில் அதிகரித்து, அதன் விலை குறையும்' என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், சில தினங்களுக்கு முன்பு தெரிவித்தார்.
எனினும், வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்த, மீண்டும், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நிர்ணயிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.இதுகுறித்து, அண்மையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.
ஆலோசனை:மேலும், நுகர்வோர் நலம், வர்த்தகம், வேளாண்மை துறை உயர் அதிகாரிகளின் கூட்டத்திலும், வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதையடுத்து, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை அதிகரிக்கப்படும் என்று தெரிகிறது.இதன் மூலம், வெங்காய ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பட்டு, உள்நாட்டில் அதன் வரத்து அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, வெங்காயம் விலை குறைய வாய்ப்புள்ளதாக, அந்த அரசு அதிகாரி மேலும் கூறினார்.

## நீர்போக உருளைக்கிழங்கு சாகுபடியில் அதிக லாபம்



கோவை:வரும் மே, ஜூன் மாதங்களில், நீர்போக உருளைக்கிழங்கிற்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது என, வேளாண் பல்கலை கூறியுள்ளது.தமிழ்நாடு வேளாண் பல்கலை வெளியிட்டுள்ள அறிக்கை:தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் ஆய்வில், கடந்த 2011-12ல், தமிழகத்தில் உருளைக்கிழங்கு 2,950 ஹெக்டரில் பயிரிடப்பட்டு, 62,940 டன் உற்பத்தி செய்யப்பட்டது.

திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் மட்டுமே உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது.நீர்போக உருளைக்கிழங்கின் விதைப்பு பணிகள், பிப்ரவரி மாதத்தில் தொடங்கும். மே, ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படும். பிப்ரவரி மாதத்தில் பயிரிடப்படும் நீர்போக உருளைக்கிழங்கிற்கு, வரும் மே, ஜூன் மாதங்களில் கிலோ, 18 முதல், 20 ரூபாய் வரை கிடைக்க வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இம்மாதங்களில் பிற மாநிலங்களிலிருந்து, இதன் வரத்து குறைவாக இருக்கும். நீலகிரி உருளைக்கிழங்கின் உயர்வான தரத்தால், அதிக விலை கிடைக்கும். இவ்விலையைக் கருத்தில் கொண்டு நீர்போக உருளைக்கிழங்கை சாகுபடி செய்ய, விவசாயிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.இவ்வாறு வேளாண் பல்கலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

04.02.2013 A.M

## பேச்சிப்பாறை அணையில் மீண்டும் தண்ணீர் திறப்பு



நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்த நிலையில் அணைகளில் வரலாறு காணாத அளவில் நீர் மட்டம் குறைந்து விட்டது. இதனால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது சுழற்சி முறைக்கு மாற்றப்பட்டது. தற்போது தேவைக்கு ஏற்ப அவ்வப்போது தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.பெருஞ்சாணி அணை யில் இருந்து நாகர்கோவில் நகர பகுதிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணைக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர்மட்டம் 4 அடியாக சரிந்த நிலையில் பேச்சிப்பாறை அணையில் இருந்து நேற்று மீண்டும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 4.90 அடியாக இருந்தது. அணைக்கு 93 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து 281 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது.பெருஞ்சாணி நீர்மட் டம் 32.70 அடி. நீர்வரத்து இல்லை. அணையில் இருந் து 103 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. சிற்றார்-1ல் 5.28 அடியும், சிற்றார்-2ல் 5.38 அடியும், பொய்கையில் 8.10 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 4.92 அடியும் நீர்மட்டம் காணப்பட்டது.ஓரிரு நாட்களுக்கு மட்டும் தண்ணீர் விநியோகம் இருக்கும் என பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சி.டி.சி தேயிலைத் தூள் கிலோ ரூ.252க்கு விற்பனை



குன்னூர் : நீலகிரி மாவட்டம் குன்னூரில் சிடிசிஏ ஏல மையத்தின் மூலம் தேயிலைத் தூள் விற்கப்படுகிறது. ஆன்லைனில் பதிவு செய்த உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்கின்றனர். இந்த ஆண்டுக்கான 5வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளியில் நடந்தது. மொத்தம் 15.69 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 88 சதவீத தூள் விற்பனையானது.

அதிகபட்சமாக சிடிசி இலை ரக தூள் கிலோ ரூ.209 முதல் ரூ.252 வரை விலை கிடைத்தது. ஏல மையம் துவங்கி, 50 ஆண்டுகளில் விலை ரூ.200ஐ தாண்டியதில்லை. முதல் முறையாக ரூ.252 வரை விலை கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மற்ற ரக தேயிலைத் தூளின் விலைகளில் பெரிய மாற்றமில்லை.

**பாசிப்பருப்பு, வத்தல் விலை உயர்வு**



விருதுநகர்: வரத்து இல்லாததால் பாசிப்பருப்பு, வத்தல், கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. வட மாநிலங்களில் பாசிப்பயறு விளைச்சல் குறைந்துள்ளது. கோவில்பட்டி, சங்கரன்கோவில் பகுதிகளிலும் பாசிப்பயறு விளைச்சல் இல்லாமல் புது பாசிப்பயறு வரத்து நின்று போனது. இதனால் பாசிப்பயறு, பாசிப்பருப்பு (100கிலோ) மூட்டைக்கு ரூ.200 உயர்ந்துள்ளது. அவியல் பாசிப்பயறு ரூ.6,400லிருந்து ரூ.6,600, சங்கரன்கோவில் பயறு ரூ.5,100லிருந்து ரூ.5,300, கர்நாடகா பாசிப்பயறு ரூ.5,600லிருந்து ரூ.5,800, ஆந்திரா பாசிப்பயறு

ரூ.5,400லிருந்து ரூ.5,600, லயன் பாசிப்பருப்பு ரூ.7,200லிருந்து ரூ.7,400, நாடு பாசிப்பருப்பு ரூ.7,200 லிருந்து ரூ.7,400 ஆக உயர்ந்துள்ளது. ஆந்திராவில் குண்டூர் மார்க்கெட்டிற்கு வத்தல் வரத்து தினசரி 35 ஆயிரம் மூட்டைகளாக குறைந்துள்ளது. தமிழகத்தில் வத்தல் விளைச்சல் இல்லாததால் கடந்த வாரம் வத்தல் விலை திடீரென்று குவிண்டாலுக்கு ரூ.1,000 வரை உயர்ந்தது. இந்த வாரமும் குவிண்டாலுக்கு ரூ.300 உயர்ந்துள்ளது. ஆந்திரா புதுவத்தல் குவிண்டால் ரூ.7,300லிருந்து ரூ.7,600ஆகவும், பருவட்டு வத்தல் குவிண்டால் ரூ.8,500 லிருந்து ரூ.8,800 எனவும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை வரத்து இல்லாத நிலையில் குஜராத் மாநிலத்தில் இருந்து வருகிறது. கடலை எண்ணெய் (15கிலோ) டின் ரூ.1,950லிருந்து ரூ.1,980ஆக உயர்ந்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

04.02.2013 A.M

---

## கிலோவுக்கு ரூ.20 வரை விலை கிடைக்க வாய்ப்பு நீர்போக உருளைக் கிழங்கை பயிர் செய்யலாம் விவசாயிகளுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

கோவை,

அறுவடை சமயத்தில் கிலோவுக்கு ரூ.20 வரை விலை கிடைக்க வாய்ப்பு உள்ளதால் நீர் போக உருளைக் கிழங்கை பயிர் செய்யலாம் என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

உருளைக் கிழங்கு

உலக அளவில் தானியம் அல்லாத உணவு பொருட்களில் உருளைக்கிழங்கு முதலிடம் வகிக்கிறது. கடந்த 2011–ம் ஆண்டில் உலக அளவில் 19.24 மில்லியன் எக்டரில் இருந்து 374 மில்லியன் டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் கடந்த 2011–12 ஆம் ஆண்டில் உருளைக் கிழங்கு 18.87 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 415.65 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

தேசிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவன கணக்குப்படி கடந்த 2011–12 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உருளைக் கிழங்கு 2,950 எக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்யப்பட்டு 62 ஆயிரத்து 940 டன் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டை காட்டிலும் உருளைக் கிழங்கில் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

மலைப்பகுதி

தமிழகத்தில் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதியில் மட்டுமே உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது. நீர் போக உருளைக்கிழங்கு பிப்ரவரி மாதத்தில் பயிர் செய்யப்பட்டு மே, ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.

விவசாயிகள் நீர் போக விதைப்பு முடிவுகளை எடுப்பதற்காக அறுவடையின் போது கிடைக்கும் விலை பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர்.

இதற்காக வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 22 வருடங்களாக நிலவிய உருளைக் கிழங்கு விலையை ஆய்வு செய்தது.

அறுவடை காலம்

இதில் நடப்பு பிப்ரவரி மாதத்தில் பயிரிடப்படும் நீர் போக உருளைக் கிழங்கிற்கு அறுவடை சமயமான வருகிற மே மற்றும் ஜூன் மாதம் 2013–ல் கிலோவுக்கு ரூ.18 முதல் ரூ.20 வரை விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும் மே மற்றும் ஜூன் மாதங்களில் பிற மாநிலங்களில் இருந்து வரும் உருளைக் கிழங்கின் வரத்து குறைவாக இருக்கும். மேலும் நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக் கிழங்கு உயர்வான தரமாக இருப்பதால் அதற்கு அதிக விலை கிடைக்கும்.

எனவே மேற்கூறிய விலையை கருத்தில் கொண்டு நீர் போக உருளைக் கிழங்கை சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.